# பேடுகள் அல்லது சேகரிப்புப் பைகளைப் பயன்படுத்தி எவ்வாறு ஒரு சிறுநீர் மாதிரியை சேகரிப்பது

**பச்சிளங்குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கானது**


## சிறுநீர் சேகரிப்பு பைகள்

**1**



மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்னரும் சேகரித்தப் பின்னரும் சோப்பு மற்றும் தண்ணீரைக் கொண்டு உங்கள் கைகளைக் கழுவவும்.

**2**




குழந்தையின் பிறப்புறுப்புப் பகுதியைச் சுத்தம் செய்து உலர்த்தவும்.

**3**



பையைப் பிறப்பு உறுப்புகளைச் சுற்றியுள்ள தோலில் உறுதியாக ஒட்டிவிடவும், பின் அதற்குமேல் ஒரு டயப்பரைப் போட்டு விடவும்.

**4**



குழந்தை சிறுநீர் கழித்து முடித்த பின், உங்கள் கைகளைக் கழுவி, பையை மெதுவாக அகற்றவும், ஒரு ஓரத்தை வெட்டி சிறுநீரை (pee) கிருமி நீக்கம் செய்யப்பட்ட கொள்கலனிற்குள் ஊற்றவும். பையானது கொள்கலனின் உட்புறத்தில் படாதவாறு பார்த்துக்கொள்ளவும்.

**5**



கொள்கலன் மீது உடனே மூடியைப் போட்டு, அதை உறுதியாக இறுக்கித் திருகவும்.

---


## சிறுநீர் சேகரிப்பு பேடுகள்

**1**



மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்னரும் பின்னரும் உங்கள் கைகளைச் சுத்தம் செய்யவும்.

**2**




இந்த பேடை டயப்பருக்கு உள்ளே வைத்து குழந்தையை வழக்கம்போல அதை அணியச் செய்யவும். பேடு ஈரமாக உள்ளதா என்பதைப் பார்க்க ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் பேடைச் சரிபார்க்கவும். ஒரு பேடை 30 நிமிடங்களுக்கு மேல் உள்ளேயே விட்டு வைக்க வேண்டாம், ஏனெனில் இது மாதிரிக்குள் கிருமிகள் செல்லக்கூடிய ஆபத்தை அதிகரிக்கிறது.

**3**



குழந்தை ஒரு பேடில் சிறுநீர் கழிக்கும் வரையில்,
ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் அல்லது குழந்தை மலம் கழித்திருந்தால் செயல்முறையை ஒரு புதிய பேடுடன் மீண்டும் தொடங்கவும்.

**4**



பேடை அகற்றுவதற்கு முன்பு உங்கள் கைகளைக் கழுவவும். பேடிலிருந்து சிறுநீரை உறிஞ்சி எடுத்து கிருமி நீக்கம் செய்யப்பட்ட கொள்கலனிற்கு அதை மாற்றுவதற்கு வழங்கப்பட்ட ஊசிக்குழலைப் பயன்படுத்தவும். ஊசிக்குழலால் கொள்கலனின் உட்புறத்தைத் தொட வேண்டாம்.

**5**



கொள்கலன் மீது உடனே மூடியைப் போட்டு, அதை உறுதியாக இறுக்கித் திருகவும்.

**6**



பஞ்சு, கட்டு போடும் துணி அல்லது வேறு எந்த பேடுகளையும் பயன்படுத்த வேண்டாம், ஏனெனில் சோதனை முடிவுகளை அவை பாதிக்கக்கூடும்.

## பொது குறிப்புகள்

- **மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்,** குழந்தையின் பிறப்புறுப்புகளைச் சுத்தம் செய்து உலர்த்தவும்.
- **ஒரு சிறுநீர் மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்னரும் சேகரித்தப் பின்னரும்** சோப்பு மற்றும் தண்ணீரைக் கொண்டு எப்போதும் உங்கள் கைகளைக் கழுவவும்.
- **மாதிரியைச் சேகரிப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கும் வரை** கிருமி நீக்கம் செய்யப்பட்ட கொள்கலனைத் திறக்கக் கூடாது.
- **பேடுகள் அல்லது பைகளை** உங்கள் சுகாதார பராமரிப்பு வழங்குநர் உங்களுக்கு வழங்கியிருந்தால்**மற்றும் அவற்றை** எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று விளக்கியிருந்தால் மட்டும் அவற்றைப் பயன்படுத்தவும். அவர்கள் உங்களுக்குக் கொடுத்த எந்த அறிவுறுத்தல்களையும் பின்பற்றவும்.
- **கொள்கலன் உட்புறத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்**மேலும் அதன் எந்தப் பகுதியையும் குழந்தையின் பிறப்புறுப்புகள் தொடுவதைத் தவிர்க்கவும்.
- **உங்கள் சுகாதார நிபுணர் உங்களைக் கேட்டுக்கொண்டால்,** மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்பாகவே கொள்கலனில் அதற்கான அடையாளக் குறிப்பை இடவும்.

## சுருக்கத் தகவல்

**சிறுநீர் மாதிரியைச் சேகரிப்பதற்குச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது, அறிவுறுத்தல்களை நான் ஏன் கவனமாகப் பின்பற்ற வேண்டும்?**

முறையான வழிமுறைகளைப் பின்பற்றுவது, மாதிரியில் கிருமிகள் நுழைவதைத் தடுக்க உதவுகிறது, இது முடிவுகளை மேலும் நம்பகமானதாக ஆக்குகிறது.

**நான் வீட்டில் உள்ள ஒரு ஜாடி**

**அல்லது கொள்கலனைப் பயன்படுத்தலாமா?**

மாதிரியைச் சேகரிக்க, உங்கள் சுகாதார நிபுணர் உங்களுக்கு வழங்கிய கொள்கலனை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

**மாதிரியை நான் எப்போது சேகரிக்கிறேன் என்பது முக்கியமா?**

மிகவும் தரமான மாதிரியைப் பெற, உங்கள் சந்திப்பு நேரத்திற்கு முடிந்தவரை நெருக்கமாக மாதிரியைச் சேகரிக்க முயற்சிக்கவும்.

**மேலும் தகவலுக்கு**
இங்கே ஸ்கேன் செய்யவும்

### சிறுநீர் மாதிரியைத் திருப்பித் தருவதற்கான குறிப்புகள்

**மாதிரியை விரைவாகத் திருப்பிக் கொடுக்கவும்** அதை உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் கூடிய விரைவில் எடுத்துச் செல்லவும் – முடிந்தால் இரண்டு மணி நேரத்திற்குள்.

**அதைக் குளிர்ந்த நிலையில் வைத்திருக்கவும்**
உங்களால் மாதிரியை உடனடியாகக் கொடுக்க முடியாவிட்டால், அதை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு, நீங்கள் கொண்டு செல்லும் வரை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக்கொள்ளவும்.

**மாதிரியை ஒப்படைக்கும் ட்ராப்-ஆஃப் (drop-off) நேரங்களைச் சரிபார்க்கவும்**
மாதிரியை ஒப்படைக்கும் கடைசி ட்ராப்-ஆஃப் நேரம் எது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவும், அதனால் மாதிரி அதே நாளில் ஆய்வகத்தைச் சென்றடைய முடியும்.

**சிறப்பு கிருமி நீக்கம் செய்யப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்தவும்**
சில கொள்கலன்கள் பதப்படுத்தும் பொடியையும், நிரப்ப வேண்டிய அளவைக் குறிக்கும் கோட்டையும் கொண்டுள்ளன. குறிக்கப்பட்ட கோடு வரை நிரப்ப முயற்சிக்கவும், ஆனால் உங்களுக்கு அது முடியாவிட்டால், உங்களால் முடிந்த அளவு சிறுநீரைச் சேகரித்தால் போதுமானது.

© க்ரவுன் பதிப்புரிமை 2026. பதிப்பு 1. வெளியிடப்பட்டது: ஜூலை 2026. திருத்தத் தேதி: ஜூலை 2029. இந்த ஆவணம் சுகாதார நிபுணர்கள், நோயாளிகள் மற்றும் தொழில்முறை மருத்துவ அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. UK சுகாதார பாதுகாப்பு நிறுவனத்தால் TARGET இயக்கப்படுகிறது.